DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 419 / 2013 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திரு. ஜீவா |
| Father Name | அய்யாதுரை |
| Village | மருதம்புதூர், ஆலங்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 32 |

**(1 ஆம் எதிரி ஆஜர் – 2 ஆம் எதிரி ஆஜரில்லை: 2 ஆம் எதிரிதரப்பில் கு.வி.மு.ச பிரிவு 317(2)ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 05-02-2025.(நேரம்: 01.15PM )**

**முதல்விசாரணை**

1.நான் தற்போது கேரளாவில் குடியிருந்து வருகிறேன்.

2. நான் கேரளாவில் உள்ள மருத்துவமனையில் உதவியாராக பணி செய்கிறேன்.

3. இவ்வழக்கின் ஆஜர் எதிரியையும், 2 ஆம் எதிரி ஜெயபிரகாசையும் எனக்கு தெரியும்.

4. கடந்த 16.08.2013 ஆம் தேதி மதியம் 03.00 மணியளவில் நானும், என்னுடன் வேலை செய்யும் முருகேசனும், ஏரலில் உள்ள பழைய காயலில் ஐஸ்வரிய பெயிண்ட் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருக்கும்போது , பாய்லரின் உள்ளே இறங்கி வேலை செய்ய போகிறோம் என்று சுப்பிரவைசர் ஜெயபிரகாஸ் என்பவரிடம் தெரிவித்து விட்டு உள்ளே இறங்கி வேலை செய்துகொண்டிருந்தோம்.

5.அப்போது எலக்ட்ரிசியன் விஜயகோபால் பாய்லர் சுவிட்சை ஆண் செய்ததால் என்னுடன் வேலை பார்த்துக்கொண்டிருந்த முருகேசன் இறந்துவிட்டார் . எனக்கு முதுகுதண்டில் இதனால் அடிப்பட்டு விட்டது.

6. இதனால் நான் 3 மாதமாக பெட் ரெஸ்டில் தான் இருந்தேன்.

7.என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள ஜீவா என்ற கையெழுத்து என்னுடையது தான். நான் ஹாஸ்பிட்டலில் வைத்து போலிசாரிடம் கையெழுத்து

போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதியிருக்கும் என்ற விவரம் எனக்கு தெரியும் .
**அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
8.இந்த விபத்தானது சுப்பர்வைசர் ஜெயபிரகாஷ் என்பவரின் கவன குறைவால் தான் ஏற்பட்டது.
9. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை ( நேரம் 01.23PM)**

1. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பாய்லர் உள்ள கம்பெனி என்ன தயாரிக்கிறது என்று கேட்டால் பெயிண்ட் தயாரிக்கும் நிறுவனம் ஆகும்.
2. அந்த கம்பெனியில் எத்தனை பேர் வேலை பார்ப்பார்கள் என்று கேட்டால் ரொம்ப நாள் ஆகிவிட்டது ஞாபகம் இல்லை.
3. சம்பவம் நடப்பதற்கு முன்பாக எத்தனை காலம் அந்த நிறுவனத்தில் வேலை பார்த்தேன் என்று கேட்டால் 8 மாதங்களாக வேலை பார்த்தேன்.
4. என்ன பணிக்காக நான் ஐஸ்வரிய பெயிண்ட் நிறுவனத்தில் வேலை பார்த்தேன் என்று கேட்டால் மெக்கானிக்காக வேலை பார்த்தேன்.
5.நான் என்ன படித்துள்ளேன் என்று கேட்டால் டிப்ளமோ மெக்கனிக்கல் இஞ்சினியரிங் படித்துள்ளேன்.
6.அந்த கம்பெனியின் உரிமையாளர் யார் என்று கேட்டால் தெரியாது.
7. அந்த கம்பெனியின் நிர்வாக அதிகாரி யார் என்று கேட்டால் தெரியாது.
8.நான் சொல்லும் பாய்லர் எவ்வளவு உயரம் இருக்கும் என்று கேட்டா்ல் சுமார் 8,9 அடி இருக்கும்.
9. பாய்லர்க்குள் சென்றால் வெளியே என்ன நடக்கிறது என்று தெரியாது என்று சொன்னால் சரிதான்.
10. என்ன பணிக்காக பாய்லருக்குள் இறங்கினோம் என்று கேட்டால் பாய்லருக்குள் இறக்கை மாட்டுவதற்காக இறங்கினோம்.
11.நாங்கள் உள்ளே இருப்பதால் வெளியே சுவிட்சை ஆப்ரேட் செய்வது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.
12.எங்களுக்கு ஏற்பட்ட விபத்திற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான்.
13.எங்களுக்கு ஏற்பட்ட விபத்திற்கும் 1ஆம் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.
14.எனக்கு நஷ்ட ஈடாக கம்பெனி எவ்வளவு பணம் கொடுத்தது என்று கேட்டால் 3 மாதமாக பெட் ரெஸ்டாக இருந்ததற்காக 3 மாத சம்பளம் எனக்கு கொடுத்தார்கள்.
15. நான் தனிப்பட்ட முறையில் யார்மீதும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.
16.எவ்வளவு மாதம் கழித்து என்னிடம் போலிசார் புகாரில் கையெழுத்து வாங்கினார்கள் என்று கேட்டால் 2, 3 மணி நேரத்தில் வாங்கினார்கள்.
17.1 ஆம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**2 ஆம் எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை'( நேரம் 01.35PM)**

1.சம்பவம் நடக்கும்போது எத்தனை மணி என்று கேட்டால் மதியம் 03.00 மணி இருக்கும்.

2. எங்களுக்கு பணி நேரம் என்ன என்று கேட்டால் காலை 07.00 மணிமுதல் மாலை 07.00 மணி வரை ஆகும்.

3. நான் அன்றைய தினத்தில் கம்பெனிக்கு வேலைக்கு சென்றேன் என்பதற்கு ரெக்கார்டு உள்ளதா என்று கேட்டால் என்னிடம் இல்லை. நிறுவனத்தில் உள்ளது.

4.பாய்லர் ஆப்ரேட்டிங் சம்மந்தமான படிப்பு எதுவும் படித்துள்ளீர்களா என்றால் இல்லை.

5. நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றும் , பாய்லர் ஆப்ரேட்டிங் சம்மந்தமான படிப்பு எதுவும் படிக்காமல் நாங்களாக பாய்லருக்குள் இறங்கி அதனை இயக்க தெரியாமல் விபத்தினை ஏற்படுத்தி கொண்டோம் என்றும் 2 ஆம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.